மா. வெங்கடேசன் மு.க.,ஆ.நி., இ.க., முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி.

மேனிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு - மே - 2022

வரலாறு மொத்த மதிப்பெண்கள் : 90

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி 20 X 1 = 20

| A | B |
|---|---|
| 1. அ) வினோபா பாவே | 1. அ) வில்லியம் ஹோவே |
| 2. ஈ) லின்லித்கோ பிரபு | 2. ஆ) பாலகங்காதர திலகர் |
| 3. இ) W.C. பானர்ஜி | 3. ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது. |
| 4. ஆ) டிசம்பர் 31, 1929 | 4. ஆ) யாமமோடோ |
| 5. ஆ) யாமமோடோ | 5. ஆ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்தமடம் |
| 6. இ) கௌர்னே | 6. இ) பாரசீகம் |
| 7. இ) 4, 3, 2, 1 | 7. இ) கௌர்னே |
| 8. அ) எஸ்.ஏ. டாங்கே | 8. இ) W.C. பானர்ஜி |
| 9. அ) ஆந்திரா | 9. ஆ) 2, 1, 4, 3 |
| 10. ஆ) பாலகங்காதர திலகர் | 10. ஆ) டிசம்பர் 31, 1929 |
| 11. ஆ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்தமடம் | 11. ஆ) 2005 |
| 12. ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது. | 12. அ) எஸ்.ஏ. டாங்கே |
| 13. இ) டியூலரிஸ் | 13. ஈ) ஜப்பான் |
| 14. ஆ) 2005 | 14. ஈ) அன்னிபெசண்ட் |
| 15. ஈ) 1945 அக்டோபர் 24 | 15. இ) 4, 3, 2, 1 |
| 16. இ) பாரசீகம் | 16. அ) ஆந்திரா |
| 17. ஈ) ஜப்பான் | 17. ஈ) லின்லித்கோ பிரபு |
| 18. அ) வில்லியம் ஹோவே | 18. அ) வினோபா பாவே |
| 19. ஈ) அன்னிபெசண்ட் | 19. ஈ) 1945 அக்டோபர் 24 |
| 20. ஆ) 2, 1, 4, 3 | 20. இ) டியூலரிஸ் |

II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 X 2 = 14

21. தேசியம் என்றால் என்ன?
- தேசியம் என்றால் ஒரு நாட்டிற்கு விசுவாசமாகவும் பக்தியோடும் இருத்தல் ஆகும்.
- தனது நாட்டை ஏனைய நாடுகளைக் காட்டிலும் உயர்வான இடத்தில் வைத்துப் பார்த்தல்.
- தனது நாட்டின் பண்பாடு மற்றும் விருப்பங்களின் வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்துதல்.

22. மிதவாத தேசியவாதிகளின் 'இறைஞ்சுதல் கொள்கை' என்றால் என்ன?
- கவனமான அணுகுமுறை, ஆங்கிலேயரிடம் மன்றாடுதல், மனுச் சமர்ப்பித்தல்.

23. அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.
- புத்தகம் - "*How India Wrought for Freedom*". வாரந்திரி - தி காமன்வீல்.

24. காந்தியடிகளின் சம்பரான் சத்தியாகிரகத்தின் போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள் யாவர்?
- ராஜேந்திர பிரசாத், மஜாருல் ஹக், ஆச்சார்யகிருபாளினி, மஹாதேவ தேசாய்.

25. இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என். டாடா அழைக்கப்பட காரணம் என்ன?
- இந்தியாவின் முதல் வெற்றிகரமான தொழிலதிபர் என்பதால், இவர் அவ்வாறு அழைக்கப்படுகிறார்.
- 1868இல் நிறுவப்பட்ட அவருடைய வர்த்தக நிறுவனம் டாடா குழுமம் என்றானது.
- பம்பாயில் உருவாக்கிய தனது நிறுவனம் ஒன்றிற்கு "சுதேசி" எனப் பெயரிட்டார்.

26. ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக?.
- வரையறுக்கப்படாத ஒரு தேதியில் டொமினியன் அந்தஸ்து வழங்குதல்.
- சிறுபான்மையினரின் உரிமைகளை அங்கீகரித்தல்,
- இந்திய உறுப்பினர்களைக் கொண்ட போர் ஆலோசனைக் குழுவை உருவாக்குதல்.

27. அரசமைப்பின் ஷரத்து 370 ன் முக்கியத்துவம் என்ன?
- இந்திய அரசமைப்பின் உறுப்பு 370 இன் படி ஜம்மு காஷ்மீருக்கு தனி சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய பிரிவினையின் போது காஷ்மீர் மக்களுக்கு அளித்த உறுதிமொழியின் படி இந்த அந்தஸ்து வழங்கப்பட்டது.
- இதன்படி இந்திய அரசின் சட்டங்கள் காஷ்மீர் சட்டமன்றத்தின் அனுமதியின்றி அங்கு செல்லுபடியாகாது.
- தற்போது இந்திய அரசு இந்த சிறப்பு பிரிவை நீக்கி சட்டம் இயற்றியுள்ளது.

28. வடஅமெரிக்காவின் ஐரோப்பியக் காலனிகள் பூர்வகுடிமக்கள் மீது எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தின?
- தங்கத்திற்காக சுரங்கங்கள் தோண்ட கட்டாயப்படுத்தப்பட்டனர்.
- ஐரோப்பிய நோய்களாலும் கொடூரமான பணிசூழல்களாலும் இம்மக்கள் பேரழிவுக்குள்ளானார்கள்.
- 11 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இம்மக்கள் உண்மையிலேய மறைந்து போயினர்.

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**மா. வெங்கடேசன் மு.க.,ஆ.நி., இ.க., முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி.**

29. மூனிச் ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?

- ❖ மூனிச் மாநாட்டில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் பிரதம அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.
- ❖ சூடட்டன்லாந்தை ஜெர்மானியப் படைகள் ஆக்கிரமித்துக் கொள்ளலாம்.
- ❖ செக்கோஸ்லோவாக்கியாவின் பகுதிகளை போலந்திற்கும், ஹங்கேரிக்கும் பிரித்துக் கொடுத்தல்.

30. முதல் உலகப்போரில் பங்கு பெற்ற மைய நாடுகளின் பெயர்களை எழுதுக.

- ❖ ஜெர்மனி, ஆஸ்திரிய - ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா.

**III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 X 3 = 21**

31. மெக்காலேயின் 'இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை' ஆய்க.

- ❖ மெக்காலே ஆங்கில மரபுக் குழுவின் கருத்துக்கு ஆதரவாக இருந்தார்.
- ❖ இந்தியர்கள் விருப்பம், ஒழுக்கம் மற்றும் அறிவில் ஆங்கிலேயராய் இருக்க விரும்பினார்.
- ❖ 1835 இல் அவர் தனது புகழ்பெற்ற "இந்தியக் கல்வி குறித்த குறிப்புகளை வெளியிட்டார்.
- ❖ இதன் விளைவாக காலனிய நிர்வாகம் ஆங்கில பள்ளிகளையும் கல்லூரிகளையும் நிறுவியது.

32. காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபடக் காரணமான சூரத் மாநாட்டின் செயல்முறைகள் குறித்து எழுதுக.

- ❖ கல்கத்தா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட நான்கு தீர்மானங்கள் குறித்த பிரச்சினை தீவிரமடைந்தது.
- ❖ பெரோஸ்ஷா மேத்தாவின் குழு இந்த தீர்மானங்களை நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்க வேண்டுமெனக் கோரியது.
- ❖ அதே சமயம் தீவிர தேசியவாதிகள் ராஷ் பிகாரி கோஷ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதை எதிர்த்தனர்.
- ❖ இக்குழப்பதால்; சூரத் மாநாட்டில் காங்கிரஸ் மிதவாத தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகளென இரு குழுக்களாகப் பிரிந்தது.

33. மாற்றத்தைவிரும்புவர்கள் - மாற்றத்தை விரும்பாதவர்கள் - வேறுபடுத்துக.

| மாற்றத்தைவிரும்புவர்கள் | மாற்றத்தை விரும்பாதவர்கள் |
|---|---|
| புதிய வழியில் செயல்பாட்டை அறிவித்தனர். | காந்திய வழியைப் பின்பற்றி மக்களை ஒன்று திரட்டினர். |
| தீவிர அரசியலுக்குத் திரும்பி தேர்தல் அரசியலில் ஈடுபட விரும்பினார்கள். | தேர்தல் அரசியல் மக்கள் பணியிலிருந்து இருந்து தங்களை விலகிச்செல்ல வைத்து விடும் என்றனர். |
| சட்டப்பேர வை நுழைவை ஆதரித்தனர். | சட்டப்பேரவை நுழைவை எதிர்த்தனர். |
| சித்தரஞ்சன்தாஸ், மோதிலால் நேரு, சத்தியமூர்த்தி, ஆகியோர் தலைமை ஏற்றனர். | இராஜாஜி, வல்லபாய்பட்டேல், இராஜேந்திர பிரசாத் ஆகியோர் தலைமை ஏற்றனர். |

34. சிட்டகாங் ஆயுதப்படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?

- ❖ சிட்டகாங்கைக் கைப்பற்றுவதற்காக கொரில்லா பாணி தாக்குதலை நடத்த அவர்கள் திட்டமிட்டனர்.
- ❖ மாகாணத்தின் பிற பகுதிகளிலிருந்து அனைத்துத் தகவல் தொடர்புகளையும் துண்டித்தனர்.
- ❖ 1930 ஏப்ரல் 18 அன்று இரவில் சிட்டகாங் படைத்தளம் தகர்க்கப்பட்டது.
- ❖ காலனிய நிர்வாகத்திற்கு நேரடியாகச் சவால் விடுக்கும் நோக்குடன் அது நடந்தேறியது.

35. எத்தகைய சூழ்நிலையில் காந்தியடிகள் வெள்ளையனேவெளியேறு இயக்கம் பற்றி சிந்தித்தார்?

- ❖ கிரிப்ஸ் தூதுக்குழுவோடு ஏற்பட்டிருந்த கசப்பான அனுபவம் காந்தியடிகளை பிரிட்டிஷார் மீது நம்பிக்கை இழக்க வைத்தது.
- ❖ விடுதலைக்கான எந்த உறுதியும் கொடுக்காமல் காலனிய அரசு இழுத்தடித்தது.
- ❖ சுபாஷ் சந்திர போஸ் அச்சு நாடுகளோடு கைக்கோர்த்து சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல நெருக்கடி கொடுத்தார்.
- ❖ ஜெர்மனியில் இருந்து ஆசாத் ஹிந்து ரேடியோ மூலம் போஸ் இந்திய மக்களைத் தொடர்பு கொண்டு உரை நிகழ்த்தினார்.

36. இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை?

- ❖ வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணத்தை நிறுவன அடிப்படையிலான காரணி, தொழில்நுட்பம் சார்ந்தகாரணி என பிரிக்கலாம்.
- ❖ நிறுவனம் சார்ந்த காரணிகள் என்பது, நிலவுடைமை வர்க்கத்தை சேர்ந்தோருக்கும் விவசாயத் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தோருக்குமிடையே நிலவிய சமூக பொருளாதார சிக்கல்.
- ❖ தொழில்நுட்பக் காரணிகள் என்பது சிறந்த விதைகள், ரசாயன உரங்கள், டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரம், நீர்ப்பாசனவசதிகள் போன்றவற்றை பயன்படுத்தாமை ஆகும்.

37. "1789ஆம் ஆண்டு புரட்சிக்கு நீண்ட காலத்திற்கு முன்னதாகவே கருத்துக்களின் களத்தில் ஒரு புரட்சி நடந்தது" - விளக்குக.

- ❖ பிரெஞ்சுப் புரட்சிக்கான சமூகத்தை தயார் செய்ததில் அறிவார்ந்த மக்கள் முக்கியப் பங்கு வகித்தனர்.
- ❖ வால்டேர், ரூசோ ஆகியோரின் எழுத்துக்கள் புரட்சிக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தன.
- ❖ மாண்டெஸ்கியூ அதிகாரங்கள் அனைத்தும் ஓரிடத்தில் குவிக்கப்படுவதை எதிர்த்தார்.
- ❖ ரூஸோ ஆள்வோர்க்கும் ஆளப்படுவோருக்குமான உறவு ஓர் ஒப்பந்தத்தால் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென வாதிட்டார்.

**மா. வெங்கடேசன் மு.க.,ஆ.நி., இ.க., முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி.**

3 8 . அகழிப்போர் எவ்வாறு நடத்தப்பட்டது?

- முதல் உலகப்போர், வீரர்களைத் தங்கள் உயிரை பாதுகாக்கும் பொருட்டு நிலத்தைத் தோண்டி அதனுள் அடைக்கலம் தேடவைத்தது.
- அகழி முறையானது இரண்டு முதல் நான்கு அகழிகள் ஒன்றுக்கொன்று இணையாக இருக்கும்.
- அகழிகளை நேர்கோட்டில் இல்லாமல் வளைந்து நெளிந்து வடிவமைத்திருந்தனர்
- இதன்படி அகழியை எதிரிகள் சுட்டாலும் சில அடிகளுக்கு மேல் தோட்டா செல்ல முடியாது.

3 9 . இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.

- பெரும் சக்தி என்ற நிலையில் இருந்து ஜெர்மனி வீழ்ந்தது.
- ஐரோப்பா தனது அந்தஸ்தையும், கௌரவத்தையும் இழந்தது.
- பொருளாதாரம் சரிந்து நொறுங்கியது.
- உலகின் இரு ஆதிக்க சக்திகளாக அமெரிக்க ஐக்கிய நாடும் சோவியத் ரஷ்யாவும் உருவானது.

4 0 . ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை குறிப்பிடுக.

- பொருளாதாரத்தை விரிவுபடுத்துதல்
- தேசிய வருமானத்திலும் தனிநபர்வருமானத்திலும் குறிப்பிடத்தகுந்த வளர்ச்சி
- தொழிற்சாலைகளின் உற்பத்தி அதிகரிப்பு
- வேளாண்மையில் நவீன இடுபொருட்களைப் பயன்படுத்துவது அதிகரித்ததுடன் வேளாண் உற்பத்தியும் அதிகரித்தது
- அதிகஅளவில் பன்முகப்படுத்தப்பட்டப் பொருளாதாரம்

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **7 X 5 = 35**

41. அ) இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக் கொள்கைகள், எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன?

- அரசு உயர்பதவிகளில் இந்தியர்களைப் பணியமர்த்தாமல் திட்டமிட்டு விலக்கி வைக்கப்பட்டதை மக்கள் இந்திய எதிர்ப்புக் கொள்கையின் நடவடிக்கையாகக் கருதினர்.
- குடிமைப் பணிக்கானத் தேர்வுகள் அறிமுகமானபோது வயது வரம்பு 21 என நிர்ணயம் செய்யப்பட்டது.
- இத்தேர்வுகளில் இந்தியர்கள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இத்தேர்வுகளை இந்தியர்கள் எழுதவிடாமல் தடுப்பதற்காக வயது வரம்பு 19 என குறைக்கப்பட்டது.
- இந்திய தண்டனைச் சட்டம் (1870) பிரிவு 124A அடக்குமுறை ஒழுங்காற்றுச் சட்டம்.
- பிராந்திய மொழிச் சட்டம் (1878) ஆகியன எதிர்ப்புகளைத் தூண்டின.
- இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பருத்தியிழைத் துணிகளின் மீதான சுங்கவரி குறைக்கப்பட்டது.
- இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பருத்தியிழைத் துணிகளின் மீதான உள்நாட்டுத் தீர்வை உயர்த்தப்பட்டது.
- இல்பர்ட் மசோதா இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்க வழிவகை செய்தது.
- ஆனால் ஐரோப்பியர் எதிர்ப்பால் ஐரோப்பியரின் விருப்பத்திற்கேற்ப அதில் திருத்தம் செய்யப்பட்டது.

41. ஆ) திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.

<u>திலகர் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கம்:</u>

- 1916இல் பெல்காமில் நடந்த பம்பாய் மாகாண மாநாட்டில் இது நிறுவப்பட்டது.
- திலகரின் இயக்கத்துக்கு ஆறு கிளைகள் ஒதுக்கப்பட்டன.
- தன்னாட்சி குறித்த கோரிக்கைகளை தமது உரைகள் மூலம் திலகர் பிரபலப்படுத்தினார்.
- தன்னாட்சி பற்றிய கொள்கைகளை பரப்பியதற்காக திலகர் கைது செய்யப்பட்டார்.

<u>அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கம்:</u>

- இந்தியா முழுவதும் தீவிரப்பயணம் மேற்கொண்டு தன்னாட்சி கருத்துக்களை பரப்பினார்.
- இந்திய விசுவாசத்தின் விலை இந்தியாவின் விடுதலை என்று அவர் அறிவித்தார்.
- மதராஸில் அன்னிபெசண்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கம் மிகவும் பிரபலம் அடைந்தது.
- தன்னாட்சி கூட்டங்களில் கலந்து கொள்ள மாணவர்களுக்குத் தடைவிதித்ததுடன் அன்னிபெசண்ட்டையும் மதராஸ் அரசு கைது செய்தது.

42. அ) டாக்டர். அம்பேத்கரின் கல்விப்பணி குறித்து, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக.

- ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் அம்பேத்கர் எப்போதும் அக்கறை கொண்டிருந்தார்.
- ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த கல்வி மிக முக்கியமான வழி என்று நம்பினார்.
- சாதி பாலின பாகுபாடின்றி வெகுஜனங்களின் கல்விக்காகப் போராடினார்.
- "கற்பி, ஒன்றுசேர், புரட்சி செய்" என்பது அம்பேத்கரின் புகழ் பெற்ற வாசகமாக இருந்தது.
- சமூகத்தில் நீதி சமத்துவம் சகோதரத்துவம் ஆகியவற்றை நிலைநாட்ட கல்வியை பயன்படுத்த விரும்பினார்.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் முன்னேறிய கல்வியினால் தாழ்த்தப்பட்டவர்கள் அதிகம் பயனடைவர் என்றார்.
- தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு கல்வி நிலையங்களில் சில இடங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றார்.
- தாழ்த்தப்பட்டோரின் நலனுக்காக பகிஷ்கிரித் ஹிடகாரினி சபா என்ற அமைப்பையும் தனது கருத்துக்களை பரப்ப மூக்நாயக் என்ற பத்திரிக்கையையும் தொடங்கினார்.

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**மா. வெங்கடேசன் மு.க.,ஆ.நி., இ.க., முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி.**

42. ஆ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது?

❖ ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷனின் தலைவர்களில் ஒருவராக பகத்சிங் விளங்கினார்.
- ❖ தொழிற்தகராறுகள் மசோதாவை அறிமுகப்படுத்திய நாளன்று மத்திய சட்டமன்றத்தின் மீது பகத்சிங்கும் அவரது நண்பர்களும் குண்டு வீசினர்.
- ❖ பின்னர் இரண்டாவது லாகூர் சதி வழக்கு எனப்பட்ட சாண்டர்ஸ் கொலை வழக்கில் பகத்சிங் தனது நண்பர்களுடன் கைது செய்யப்பட்டார்.
- ❖ "முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றின் நாட்கள் எண்ணப்பட்டு வருகின்றன என்றார்.
- ❖ புரட்சி என்பது மனித குலத்தின் பிரிக்கமுடியாத உரிமை என்றார்.
- ❖ சுதந்திரம் என்பது அனைவரின் அழியாத பிறப்புரிமை என்றார்.
- ❖ லாகூர் சிறைச்சாலையில் 1931 மார்ச் 23 அன்று பகத்சிங், தூக்கிலிடப்பட்டார்.
- ❖ தனது இறுதிமூச்சு அடங்கும் வரை ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் 'புரட்சி ஓங்குக' என்று முழங்கினார்.

43. அ) இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக.
- ❖ போருக்குப் பின்பு ஒரு ஆணையத்தின் மூலம் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் தொடர் மாவட்டங்களைப் பிரித்தல்.
- ❖ அம்மாவட்டங்களில் வயதுத் தகுதி அடைந்தோரைக் கொண்டு வாக்கெடுப்பு நடத்தி பாகிஸ்தான் உருவாக்கம் பற்றிய முடிவை எடுத்தல் வேண்டும்.
- ❖ ஒருவேளை ஓட்டெடுப்பின் முடிவில் பிரிவினை உறுதிசெய்யப்பட்டால் பொதுவான ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்த வேண்டும்.
- ❖ அவ்வொப்பந்தத்தில் பாதுகாப்பு, தொலைத்தொடர்பு போன்றவை இடம்பெற வேண்டும்.
- ❖ எல்லையில் அமையப் பெற்ற மாவட்டங்களுக்கு இரு இறையாண்மை கொண்ட நாடுகளில் ஏதோ ஒன்றில் சேர்ந்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.
- ❖ முழுமையான அதிகார மாற்றம் ஏற்பட்டபின் இத்திட்டங்கள் செயல்முறைக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும்.
- ❖ 'இராஜாஜி திட்டத்தை' அடிப்படையாகக் கொண்டு காந்தியடிகள் ஜின்னாவோடு பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தார்.
- ❖ ஆனால் அந்தப் பேச்சுவார்த்தையில் எந்தமுடிவும் எட்டப்படவில்லை.

43. ஆ) சுதேசஅரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக.

<u>சுதேசஅரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள்</u>
- ❖ ஹைதராபாத் நிஜாம் இந்திய ஆளுகைக்கு கீழ்ப்படிய மறுத்து, ஹைதராபாத்தை சுதந்திர அரசாக அறிவித்தார்.
- ❖ ஜுனாகத் அரசர் மக்கள் விருப்பத்திற்கு எதிராக பாகிஸ்தானுடன் சேர விரும்பினார்.
- ❖ காஷ்மீரின் மகாராஜா ஹரிசிங் காஷ்மீரை சுதந்திர அரசாக அறிவித்தார்.
- ❖ மேற்கண்ட அரசுகளின் நிலைப்பாடுகள் இந்திய ஒன்றியம் முழுமையடைவதை தாமதப்படுத்தின

<u>சுதேசஅரசுகளை இந்திய ஒன்றியத்துடன் , இணைத்ததில் படேல் மற்றும் நேருவின் பங்களிப்பு</u>
- ❖ இந்திய ஒன்றியத்தோடு இணையும் சுதேச மன்னர்களுக்குத் தாராளமாக மன்னர் மானியங்கள் வழங்கப்பட்டன.
- ❖ ஹதராபாத் நிஜாம் விடுதலைப் பிரகடனம் செய்த 48 மணி நேரத்திற்குள் இந்தியா அங்கு காவல்துறை நடவடிக்கைகளைத் தொடர்ந்தது.
- ❖ ஜூனாகாத் மக்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்தி அதனை இந்திய யூனியனுடன் இணைத்தார்.
- ❖ பாகிஸ்தானியர்கள் சிலர் காஷ்மீரை தாக்கியபோது படேல் காஷ்மீர் அரசரிடம் இணைப்புறுதி பத்திரத்தில் கையொப்பம் பெற்று அதனை இந்திய யூனியனுடன் இணைத்தார்

44. அ) தொழிற்புரட்சி ஏன் முதலில் இங்கிலாந்தில் தொடங்கிற்று? நவீன சமூகத்தின் மீது அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது?

<u>இங்கிலாந்தில் தொழிற்புரட்சி ஏற்பட்டதற்கான காரணங்கள்.</u>
- ❖ தொழிற்சாலைகளில் முதலீடு செய்யத் தேவையான மூலதனம் தாராளமாகக் கிடைத்தது
- ❖ அதன் அரசியல் உறுதித்தன்மை தொழில்களின் வளர்ச்சிக்குச் சாதகமான சூழலை உருவாக்கியது.
- ❖ நிலக்கரி, இரும்பு போன்ற மூலவளங்கள் இங்கிலாந்தில் அதிக அளவில் கிடைத்தது.
- ❖ தனது கடற்கரைப்பகுதி முழுவதிலும் இங்கிலாந்து சிறப்பான துறைமுகங்களைக் கொண்டிருந்தது.

<u>தாக்கம்</u>:
- ❖ ஆலைகள் இயந்திரமயமானதால் உற்பத்தியும், செல்வமும் மிகப் பெருமளவிற்குப் பெருகியது.
- ❖ ஆயிரக்கணக்கான கைவினைஞர்களும் நெசவாளர்களும் வேலை இழந்தனர்.
- ❖ பெண்கள், குழந்தைககளிடமிருந்து மலிவான விலையில் உழைப்பு பெறப்பட்டது.
- ❖ ஆலை முதலாளிகள், ஆலைத் தொழிலாளர்கள் என இரண்டு வர்க்கங்கள் உருவாயின .

44. ஆ) வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் ஜெர்மனியைப் பொறுத்தமட்டில் கடுமையானதாகவும், அவமானப்படுத்தக் கூடியதாகவும் தெரிந்தது - இக்கூற்றினுக்கான ஆதாரப் பின்புலத்தை உறுதிப்படுத்துக.
- ❖ அல்சேசையும், லொரைனையும் ஜெர்மனி பிரான்சிடம் ஒப்படைத்தது.
- ❖ சார் பள்ளத்தாக்கின் நிலக்கரி சுரங்கங்கள் பிரான்சிடம் வழங்கப்பட்டது.
- ❖ ஜெர்மானிய காலனிகள் யாவும் பன்னாட்டு சபையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.
- ❖ ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்களும், போர்கப்பல்களும் பறிமுதல் செய்யப்பட்டது.
- ❖ இராணுவப் பயன்பாட்டிற்காக ஜெர்மனி விமானங்களைக் கொண்டிருக்கக்கூடாது எனப்பட்டது.
- ❖ மேலும் அதன் தரைப்படை 100,000 என்ற எண்ணிக்கையைத் தாண்டக்கூடாதென்றும் வரையறுக்கப்பட்டது.
- ❖ ஜெர்மனி ஆஸ்திரியாவின் சுதந்திரத்தை அங்கீகரிக்க வற்புறுத்தப்பட்டது.
- ❖ ஜெர்மனியும் அதன் கூட்டு நாடுகளுமே போரில் ஏற்பட்ட இழப்புகளுக்கும், சேதங்களுக்கும் பொறுப்பெனக் கூறப்பட்டது.

**மா. வெங்கடேசன் மு.க.,ஆ.நி., இ.க., முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி.**

4 5 . அ) இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும், ஹிட்லரும் எந்த அளவிக்குக் காரணமாவார்கள் என்பதனை ஆய்ந்து கூறுக.

- வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்படி ஸார் பகுதியில் பொதுவாக்கெடுப்பு நடத்தி அதனை ஜெர்மனியோடு இணைத்தார்.
- வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தை மீறி ஹிட்லர் மீண்டும் ரைன்லாந்தில் இராணுவத்தை குவித்தார்.
- ஹிட்லரின் நிர்ப்பந்தத்தால் ஆஸ்திரியாவில் நாஜி அரசு ஏற்படுத்தப்பட்டது.
- ஜெர்மானிய படைகள் வியன்னாவிற்குள் நுழைந்து அந்நாட்டின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்தின.
- சூடட்டன்லாந்தை இராணுவத்தை கொண்டு ஆக்கிரமித்தார்.
- செக்கோஸ்லோவாக்கியாவிற்குள் ஏற்பட்ட முரண்போக்கை காரணம்காட்டி ஹிட்லர் அங்கு ஜெர்மானியப் படைகளை அனுப்பினார்.
- ஐரோப்பா முழுவதையும் ஆக்கிரமிக்கும் நோக்கம் கொண்டிருந்த ஹிட்லர் 1939 செப்டம்பர் 1இல் போலந்தின் மீது தாக்குதல் நடத்தினார்.
- போலந்திலிருந்து ஜெர்மனியை வெளியேற பிரிட்டன் விடுத்த இறுதி எச்சரிக்கை புறக்கணிக்கப்பட்டதால் இரண்டாம் உலகப்போர் மூண்டது.

45. ஆ) அரபு-இஸ்ரேலிய முரண்பாட்டின் தோற்றத்தை விவாதிக்கவும். தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகள் எவ்வாறு இரு நாடுகளுக்கிடையே 1967இல் பெரும் போர் ஏற்படக் காரணமாயிற்று என்பதை விளக்கவும்.

- 1947 நவம்பரில் பாலஸ்தீனத்தை அராபியர் நாடு, யூதர்கள் நாடு என இரண்டாகப் பிரிப்பதற்கு ஐ.நா.சபை வாக்களித்து முடிவு செய்தது.
- எனவே பாலஸ்தீனத்தில் அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே போர் மூண்டது.
- பாலஸ்தீனத்திலிருந்து ஆங்கிலப்படைகள் வெளியேறிய பின்னர் இஸ்ரேல் தன்னை சுதந்திர நாடாக அறிவித்தது.
- இஸ்ரேல் உருவாக்கப்பட்டதன் தொடக்கத்திலிருந்தே ஐ.நா. சபை அரசியல் முடிவுகள் எடுப்பதில் ஓரளவே ஈடுபாடு கொண்டது.
- 1966 வாக்கில் அமெரிக்கா இஸ்ரேலுக்கு புதிய ரக போர் விமானங்களையும் ஏவுகணைகளையும் வழங்கத்தொடங்கியது.
- 1967ஆம் ஆண்டு இஸ்ரேலுக்கும் சிரியாவிற்கும் இடையில் பீரங்கிப் பரிமாற்றங்கள் இருந்தன.
- சிரியாவின் கடற்கரைக்குச் சற்றுதொலைவில் அமெரிக்காவின் ஆறாவது கப்பற்படை நிலைகொண்டது.
- இதனைத் தொடர்ந்து எகிப்து டைரன் நீர்ச்சந்தி வழியாக இஸ்ரேலின் கப்பல்கள் பயணப்படுவதற்குத் தடைவிதித்தது. எனவே இஸ்ரேல் எகிப்தைத் தாக்கியது.

46. அ) இந்திய தேசிய இயக்கத்தில் வ. உ. சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

<u>சுதேசி கப்பல் கம்பெனி நிறுவுதல்</u> :

- ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராகச் சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றார்.
- அதன்படி சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி எனும் கூட்டுப்பங்கு நிறுவனத்தைப் பதிவு செய்தார்.
- வ.உ.சி. S.S.கலியா, S.S.லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கியபோது தமிழ்நாட்டின் சுதேசி இயக்கம் தேசத்தின் கவனத்தைப் பெற்றது.
- சுதேச இயக்கத்திற்கு ஆதரவாக இந்தியாவின் பண்டையகால கடற்பயணப் பெருமைகளை துணையாகக் கொண்டார்.

<u>கோரல்மில் தொழிலாளர் போராட்டம்</u> :

- கோரல்மில் தொழிலாளர்களின் படுமோசமான வேலை, வாழ்க்கைச் சூழல்கள் ஆகியவற்றை எதிர்த்து சிவாவுடன் இணைந்து குரல் கொடுத்தார்.
- இதனால் ஏற்பட்ட போராட்டத்தின் விளைவாக ஆலை முதலாளிகள் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடிவு செய்தனர்.

<u>பிபின் சந்திரபாலின் விடுதலையை கொண்டாடுதல்</u> :

- பிபின் சந்திரபாலின் விடுதலையை சுதேசி தினமாக திருநெல்வேலியில் தடையை மீறி கொண்டாடினார்.
- இதன் விளைவாக கைது செய்யப்பட்டு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப் பெற்றார்.

4 7. அ( அமெரிக்கவிடுதலைப் போருக்கான காரணங்கள் குறித்து விவாதிக்கவும்.

- நாவாய் சட்டங்கள், சர்க்கரை வரி, முத்திரைச் சட்டம், டவுன்ஷெண்ட் சட்டம், தேயிலை வரி, பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்கள் ஆகியவற்றை தனது அமெரிக்க குடியேற்றங்கள் மீது இங்கிலாந்து திணித்தது.
- பாஸ்டன் நகரில் அணிவகுத்து சென்ற ஆங்கில படைகளை விமர்சனம் செய்த அமெரிக்கர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.
- பாஸ்டன் படுகொலையைத் தொடர்ந்து 100 கிளர்ச்சியாளர்கள் பூர்வகுடி அமெரிக்கர்களைப் போல வேடம் தரித்தனர்.
- அவர்கள் பாஸ்டன் துறைமுகத்தில் இருந்த மூன்று கப்பல்களில் ஏறினர்.
- அக்கப்பல்களிலிருந்த 342 தேயிலை பெட்டிகளைக் கடலுக்குள் வீசி எறிந்தனர்.
- 1774 இல் இங்கிலாந்து பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட கியூபெக் சட்டத்தினால் நியூயார்க், பென்சில்வேனியா,வெர்ஜீனியா ஆகிய அரசுகள் கோபம் கொண்டன.
- மேலும் பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்கள் நீக்கப்பட வேண்டுமென குடியேற்றங்களின் பிரதிநிதிகள் கோரிக்கை வைத்தனர்.
- அவர்கள் இங்கிலாந்து அரசர் மூன்றாம் ஜார்ஜுக்கு கோரிக்கை மணுவைஒரு ஆலிவ் கிளையோடு அனுப்பி வைத்தனர்.
- ஆனால் அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அமெரிக்க விடுதலைப்போர் தொடங்கியது.

Padasalai.Net

**மா. வெங்கடேசன் மு.க.,ஆ.நி., இ.க., முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி.**

47. ஆ) முதல் வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து கட்டுக.

1920 - ஒத்துழையாமை இயக்கம்.
1921 - வேல்ஸ் இளவரசர் பயணம் புறக்கணிப்பு
1922 - சௌரிசௌரா சம்பவம் / ஒத்துழையாமை இயக்கம் நிறுத்திவைப்பு.
1923 - சுயராஜ்யகட்சி தொடக்கம்.
1924 - கான்பூர் சதி வழக்கு.
1927 - சைமன் குழு அமைக்கப்படல்
1928 - சைமன் குழு இந்தியா வருகை, நேரு அறிக்கை.
1929 - லாகூர் தீர்மானம், மீரட் சதி வழக்கு.
1930 - தண்டி யாத்திரை, சட்ட மறுப்பு இயக்கம், முதல் வட்டமேஜை மாநாடு.
1931 - காந்தி - இர்வின் ஒப்பந்தம், இரண்டாம் வட்டமேஜை மாநாடு.
1932 - வகுப்புவாரி இடஒதுக்கீடு, பூனா ஒப்பந்தம், மூன்றாம் வட்டமேஜை மாநாடு.
1935 - இந்திய அரசுச்சட்டம்.
1937 - மாகாணங்களில் முதல் காங்கிரஸ் அமைச்சரவை.
1939 - போஸ் காங்கிரசிலிருந்து நீக்கப்படுதல், காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா.
1940 - தனிநபர் சத்தியாகிரகம், ஆகஸ்ட் கொடை, லாகூர் தீர்மானம் ( பாகிஸ்தான் தீர்மானம் ).
1942 - கிரிப்ஸ் தூதுக்குழு வருகை, வெள்ளையனே வெளியேறு இயக்கம்.
1943 - சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசு அமைக்கப்படல்.
1944 - ராஜாஜி திட்டம்.
1945 - வேவல் திட்டம், சிம்லா மாநாடு.
1946 - அமைச்சரவை தூதுக்குழு, நேரடி நடவடிக்கை நாள், இடைக்கால அரசாங்கம், ராயல் கப்பற்படை கலகம்.
1947 - இந்திய - பாகிஸ்தான் பிரிவினை, இந்திய விடுதலை.
1948 - காந்திஜி படுகொலை.
1949 - இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்படல்.
1950 - இந்தியா குடியரசு நாடாக மாறுதல்.

Padasalai.Net